திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 10827 /ஈ3/2018 நாள்: . 11.2019,

| | |
|---|---|
| பொருள் | திருவள்ளூர் மாவட்டம் –சென்னை, MSME (Ministry of Micro, Small & Medium Enterpriises) – அரசு /அரசு நிதி உதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் ஓவிய போட்டி நடத்துதல்– இப்போட்டியில் மாணவ/ மாணவிகளை பங்குபெற செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சார்ந்து. |
| பார்வை | 01.MSME நிறுவன ந.க. எண் 10015,02,2019 –20,Dist.Award./TVLR |
| | 02. Office of Development Commisioner, Ministry of MSME, Govt. of India, New Delhi sanction no NA/10/State/UT Award DI/2019 dt. 02.-9.2019.<br>3. தமிழ்நாடு, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 058760/எம் /இ2/2019 நாள்: . 11.2019, |

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க, அரசு /அரசு நிதி உதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே 9–ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் கட்டுரை மற்றும் ஓவிய போட்டிகள் நடத்தி அதில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பணப்பலன்கள் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இணைப்பில் காPம் வழிமுறைகளை பின்பற்றி அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள அரசு /அரசு நிதி உதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கி, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்து அதிகளவிலான மாணவர்களை பங்கேற்க செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விருப்பமுள்ள மாணவர்களிடமிருந்து Format for Personal Information படிவத்தை பூர்த்தி செய்து பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து பெற்று அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஒரு வார காலத்திற்குள் பெற்று , தொகுத்த விவரங்களை இவ்வலுவலக ஈ3 பிரிவு எழுத்தரிடம் (9843548354) தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இப்போட்டியானது அனைத்து கல்வி மாவட்டங்களிலும் ஒரே நாளில் 08.01.2020 அன்று நடைபெறவுள்ளதால், போட்டிற்கான மையம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். போட்டியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போட்டி நடைபெறும் மையங்களை பின்னர் நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

போட்டி நேரம்– கட்டுரை காலை 10.00 முதல் 11.00 மணி வரை (A4 தாளில்)

ஓவியம் காலை 11.30 முதல் 12.30 மணி வரை (A3 தாளில்) , போட்டி மையத்திற்கு செலவீனத் தொகையாக ரூ.3000/– வழங்கப்படும். ஒவ்வொரு மையத்திலும் போட்டிகளை மேற்பார்வையிடவும் மதிப்பீடு செய்யவும் 2 ஆசிரியர்கள் தேவை. அவர்களுக்கு ரூ.500 வெகுமானத்

தொகையாக வழங்கப்படும். போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பேனாக்கள், வரை பொருட்கள் (ஸ்கெட்ச் மற்றும் வாட்டர் கலர்) எடுத்து வரவேண்டும். கட்டுரை எழுதும் தாள் மற்றும் வரைவதற்குத் தேவையான தாளும் போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும்.

தலைப்பு– Essay - Role of MSME in Development of Indian Economy.

Painting – Traditions of Tamilnadu.

மாவட்ட அளவில் வெற்றி பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம்.

| Activity | First Prize | Second Prize | Third Prize |
|---|---|---|---|
| Essay | Rs.10,000 | Rs.7,500 | Rs.5,000 |
| Painting | Rs.10,000 | Rs.7,500 | Rs.5,000 |

இணைப்பு– 1. MSME நிறுவன கடித நகல்

2. Format for Personal Information

முதன்மைக் கல்வி அலுவலர்

திருவள்ளூர்

பெறுநர் :

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

(திருவள்ளூர்,திருத்தணி,ஆவடி,அம்பத்தூர்,பொன்னேரி)

நகல்– Mr. Kiran Dev Satuluri

Assistant Director,

65/1, G.S.T.Road, Guindy,

Chennai.